**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, AVUDAIYARKOIL**
**CC.No. 44/25**
**WITNESS: LW.1 /PW.1 ( DEFACTO COMPLAINANT)**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சிராஜீதீன் | ஜாதி: | |
| தந்தை பெயர்: | பஷிர் | தொழில்: | இரண்டாம் நிலைக்காவலர், ஏம்பல் காவல் நிலையம். |
| கிராமம்: | ஏம்பல் | சமயம்: | |
| தாலுக்கா: | ஆவுடையார்கோவில் | வயது : | 30/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969. (Act 44 of 1969) on 2nd day of September 2025. | | | |

(2-ம் எதிரி ஆஜர்.)

(1 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

1. நான் ஏம்பல் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த ஆஜர் 2-ம் எதிரியை எனக்கு தெரியும். இவ்வழக்கின் மற்ற எதிரிகளான பழனிமுத்து, ஸ்ரீகாந்த் ஆகியோரையும் எனக்கு தெரியும். கடந்த 10.01.2025-ம் தேதி இரவு 07.30 மணியளவில் நான் ஏம்பல் காவல் நிலையத்தில் நிலைய பாரா பொறுப்பில் இருந்தேன். அப்போது இயற்கை உபாதை கழிப்பதற்காக சென்றிருந்தேன்.

2. பின்னர் காவல் நிலையத்தில் உள்ள அரசு சொத்துக்களை சரிபார்ப்பதற்காக சென்றபோது ஏம்பல் காவல் நிலைய குற்றஎண். 01/2025 மணல் திருட்டு வழக்கில் கைப்பற்றப்பட்ட டிராக்டர் மற்றும் டிரைலருடன் காணாமல் போயிருந்தது. காணாமல் போனது குறித்து நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் மனோகர் அவர்களுக்கு தகவல் தெரிவித்தேன். பின்னர் அவர் என்னை புகாராக கொடுக்க சொன்னார். நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம்

காட்டப்படும் புகார் நான் அளித்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர். நான் நடந்த விவரம் பற்றி சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, AVUDAIYARKOIL**
**CC.No. 44/25**
**WITNESS: LW.3 /PW.** 2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சண்முகசுந்தரம் | ஜாதி: | |
| தந்தை பெயர்: | ராஜேந்திரன் | தொழில்: | இரண்டாம்நிலைக் காவலர், ஏம்பல் காவல் நிலையம். |
| கிராமம்: | ஏம்பல் | சமயம்: | |
| தாலுக்கா: | ஆவுடையார்கோவில் | வயது : | 33/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969. (Act 44 of 1969) on 2nd day of September 2025. | | | |

(2-ம் எதிரி ஆஜர்.)

(1 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

1. நான் ஏம்பல் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த ஆஜர் 2-ம் எதிரியை எனக்கு தெரியும். இவ்வழக்கின் மற்ற எதிரிகளான பழனிமுத்து, ஸ்ரீகாந்த் ஆகியோரையும் எனக்கு தெரியும். கடந்த 10.01.2025-ம் தேதி இரவு 07.30 மணியளவில் விசூர் பிரிவு ரோட்டில் நானும், முதல்நிலைக்காவலர் வினோத் என்பவரும் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தோம்.

2. அப்போது எனக்கு காவல் உதவி ஆய்வாளர் மனோகர் போன் மூலம் ஏம்பல் காவல் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த குற்ற எண்.01/2025 மணல் வழக்கில் கைப்பற்றப்பட்ட டிராக்டரை யாரோ திருடிச் சென்றுவிட்டார்கள் என்று சொன்னார். பின்னர் டிராக்டரை அனைத்து இடங்களிலும் தேடினோம். டிராக்டர் கிடைக்கவில்லை. பின்னர் மறுநாள் காவல் உதவி ஆய்வாளர் டிராக்டரை கண்டுபிடித்திருப்பதாகவும், அதனை திருடியவர்கள் ஸ்ரீகாந்த், பழனிக்குமார் மற்றும்

வீரையா என்றும் தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தனர். நான் நடந்த விவரம் பற்றி சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை**